

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 314 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 11 – வியாழக்கிழமை 25 ஜூன் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 314 : Thiruvalluvar Year - 2057 - Aani 11 - Thursday 25 June 2026 - Chennai 12 Pages ₹ 5.00


### GenZ கூட்டம்: கழக இளைஞர்களை காவல்துறை மூலம் அச்சுறுத்த நினைத்தால்

# கழகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது!

## த.வெ.க. அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஜூன் 25 -**

**GenZ கூட்டம் நடத்திய கழகத் தினர் மீது த.வெ.க. ரவுடிகள் கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்துடன் காவல்துறையினரும் நள்ளிரவில் அத்துமீறி நுழைந்து அராஜகம் செய்கின்றனர். இத்தகைய சோபா மாடல் அரசின் நடவடிக்கைகளை கழகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்.**

Gen Z கூட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர் அணி கனி மீது த.வெ.க. ரவுடிகள் சைதாப்பேட்டையில் கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கனியை தாக்கிய குற்றவாளிகள் மீது இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யாத காவல்துறை, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த கனியை மிரட்டி டிஸ்சார்ஜ் செய்ய வைத்துள்ளது த.வெ.க. அரசின் போலீஸ் துறை.

அதே போன்று நேற்று முன்தினம் (23.6.2026) நள்ளிரவில் கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராயக்கோட்டை அருகே உள்ள போடம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் தி.மு.க. விவசாய அணியின் மாநில துணைச் செயலாளர் அரியப்பன். இவரது இளைய மகன்



அன்பானந்தம், தி.மு.க.வின் 'GEN Z' ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக உள்ளார். சமூக வலைதளங்களில் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி வரும் இவர், நேற்று முன்தினம் தமிழக முதல்வர் விஜய், நடிகை திரிஷா வுடன்பிறந்தநாள்கொண்டாடியது குறித்து விமர்சித்து சமூக வலைதள பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு சுமார் 12:30 மணியளவில் தேன்கனிக் கோட்டை டி.எஸ்.பி. ஆனந்தராஜ் தலைமையில், காவல் ஆய்வாளர் சசிகலா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட போலீசார் திடீரென அரியப்பனின் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் அன்பானந்தத்தை விசாரணைக்காக அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூறி வீட்டினை சோதனையிட்டுள்ளனர்.

இந்நிலையில் சமூக வலைதளத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளதாவது:-

**கழகத்தின் GenZ இளைஞர்களை ஒருங்கிணைத்துக் கூட்டங்கள் நடத்தி வந்த தம்பி அன்பானந்தன் அரியப்பனை, கிருஷ்ணகிரி ராயக்கோட்டையில் அவரது வீட்டுக்குள் நள்ளிரவில் அத்து மீறி நுழைந்து காவல்துறையினர் கைது செய்ய முயற்சி செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன்.**

**இதே போல சமீபத்தில், Gen Z கூட்டத்தில் பேசிய கனி எனும் தம்பி மீது த.வெ.க. ரவுடிகள் சைதாப்பேட்டையில் கொலை வெறி தாக்குதல் நடத்தியுள்ளனர்.**

**தம்பி கனியை தாக்கிய குற்றவாளிகள் மீது இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யாத காவல்துறை, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு இருந்த தம்பி கனியை மிரட்டி டிஸ்சார்ஜ் செய்ய வைத்தது.**

### ஆளுங்கட்சியை எதிர்த்தால் போலீசாரை அனுப்புவதா?

**கழக இளைஞர்கள் ஆளுங்கட்சியையும் அரசையும் எதிர்த்து பேசினால் காவல்துறையை அனுப்புவது, அதுவே, தாக்கியவர்கள் த.வெ.க.வினர் என்றால் வேடிக்கைப் பார்ப்பது… இது தான் மாற்றமா?**

### தி.மு.கழகம் வேடிக்கை பார்க்காது!

**நிர்வாகத்திறனற்ற SofaModel அரசின் போலி பிம்பம், இளைஞர்கள் மத்தியில் சுக்குநூறாக நொறுங்கி வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் இந்த ஆட்சியாளர்கள் அடக்குமுறையை கையில் எடுத்து இருக்கிறார்கள்.**

> **நிர்வாகத்திறனற்ற #SofaModel அரசின் போலி பிம்பம், இளைஞர்கள் மத்தியில் சுக்குநூறாக நொறுங்கி வருவதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் இந்த ஆட்சியாளர்கள் அடக்குமுறையை கையில் எடுத்து இருக்கிறார்கள்.**

**கழக இளைஞர்களை காவல் துறையை ஏவி அச்சுறுத்தலாம் என்று ஆளும் அரசு நினைத்தால், கழகம் அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது என்று எச்சரிக்கிறேன்.**

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளர் - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### 200 யூனிட் இலவச மின்சாரம் - பயிர்க்கடன்:

## மக்களை ஏமாற்றும் த.வெ.க. அரசு!

### மக்கள் குமுறல்!

*சென்னை, ஜூன் 25 -*

*200 யூனிட் இலவச மின்சாரம், பயிர்க்கடன் தள்ளுபடி வரிசையில் குழந்தைகளுக்கான தங்க மோதிரம் திட்டத்திலும் த.வெ.க. அரசு மக்களை ஏமாற்றியுள்ளது.*

*தமிழ்நாட்டில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் வழங்கப்படும் என விஜய் தேர்தல் வாக்குறுதியளித்திருந்தார். ஆனால், தற்போது, அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும் தங்க மோதிரம் வழங்கப் படும் என த.வெ.க. அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.*

*இது பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் பிரச்சாரத்தில், தமிழ்நாட்டில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் வழங்கப்படும் என விஜய் பேசிய வீடியோ ஆதாரம் இணையத்தில் வைரலாகி வருகிறது.*

*முன்னதாக, மாதந்தோறும் 200 யூனிட் இலவச மின்சாரம் என வாக்குறுதியளித்துவிட்டு, பின்னர் 2 மாதங்களுக்கு 200 யூனிட் இலவசம் என விஜய் ஏமாற்றினார். 200 யூனிட் இலவச மின்சார திட்டத்திலும் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்ததால் மக்கள் ஏமாற்றமடைந்தனர்.*

*அடுத்ததாக, அனைத்து பயிர்க்கடனும் தள்ளுபடி செய்யப்படும் என வாக்குறுதியளித்துவிட்டு, பின்னர் குறிப்பிட்ட விவசாயிகளுக்கு மட்டுமே தள்ளுபடி என ஏமாற்றினார். பயிர்க்கடன் தள்ளுபடியில் விவசாயிகளை வஞ்சித்த த.வெ.க. அரசையும், விஜயையும் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்த வரிசையில், குழந்தைகளுக்கு தாய்மாமன் திட்டத்திலும் த.வெ.க. அரசு மக்களை ஏமாற்றியுள்ளது.*

---

### மழையால் நெல் மூட்டைகள் சேதம்!

## விவசாயிகளின் உழைப்பு வீண்!

### உயர்நீதிமன்ற நீதிபதிகள் வேதனை!

*மதுரை, ஜூன் 25*

*தமிழகத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்டா உள்ளிட்ட மத்திய மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. இதனால் கொள்முதல் செய்ய தயாராக வைத்திருந்த மற்றும் நெல் கொள்முதல் நிலையங்களில் வைத்திருந்த நெல் மூட்டைகள் போதிய பாதுகாப்பு வசதியின்மையால் மழையில் நனைந்து சேதம் அடைந்தது.*

*இந்தநிலையில் தஞ்சையை சேர்ந்த அமிர்தராஜ் ஹமீதுதீன் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார். அதில் மழை, வெள்ளம் போன்றவற்றிலிருந்து நெல்லை பாதுகாக்கும் வகையில் சேமிப்பு, பராமரிப்பு, கையாளுதல், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிலையான வழிகாட்டுதல்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும், இது போன்ற சேதங்களால் விவசாயிகளுக்கு ஏற்பட்டு இழப்புகளுக்கு உரிய இழப்பீடு வழங்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.*

*இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அதற்கு நீதிபதிகள், மனுதாரர் குறிப்பிட்டிருக்கும் இடம் மட்டுமல்ல, பல மாவட்டங்களில் இந்த பிரச்சனை உள்ளது. ஒரு நாள் மழையில், பல மாத உழைப்பு வீணாகிறது. பெரும் இழப்பு ஏற்படுகிறது. விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என கருத்து தெரிவித்தனர்.*

---

# எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டுதானே?

**கல்லாபெட்டி கட்சிகள், அல்லுசில்லுகள் என்று அரசியல் கட்சிகளை கொச்சைப் படுத்தி பேசும் முதலமைச்சர் விஜயை இன்னமும் காக்கத் துடிக்கலாமா? எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டுதானே?**

தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்புக்கும் மரியாதைக்கும் நெறிமுறைகளுக்கும் கண்ணியத்துக்கும் இழுக்கு ஏற்படுத்தும் வகையில் முதலமைச்சர் விஜய் ஆற்றிய உரையை ஒப்புக்கு கண்டித்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் அத்துடன் சேர்த்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியும் பேசியது தவறு என்று சொல்லி இருக்கிறார்கள்.

சபையின் கண்ணியத்தைக் குலைக்கும் வகையில் முதலமைச்சர் பேசியதையும் அதற்கு எதிர்வினையாக சபைக்கு வெளியில் செய்த விமர்சனத்தையும் ஒன்றாகப் பார்ப்பது சரியா?

**எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டு தானே? கல்லாப்பெட்டி கட்சிகள், அல்லுசில்லுகள் என்று அரசியல் கட்சிகளைக் கொச்சையாகப் பேசும் முதலமைச்சரைக் காக்க இன்னமும் துடிப்பது ஏனோ?**